

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 85 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 18 – திங்கள்கிழமை 04 நவம்பர் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 85 : Thiruvalluvar Year - 2055 - Appasi 18 - Monday 04 November 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## வரி வருவாய்:

## நியாயமாக பகிர்ந்தளிக்க வேண்டும்!

### சித்தராமையா வலியுறுத்தல்!



பெங்களூரு, நவ. 4 -

வரி வருவாயை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பதில் ஒன்றிய அரசு நியாயமான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும் என கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா வலியுறுத்தி உள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற கர்நாடக மாநில அமைப்பு தின நிகழ்ச்சியில், அம்மாநில முதலமைச்சர் சித்தராமையா கலந்து கொண்டார்.

அப்போது பேசிய அவர், ஒன்றிய அரசிடம் இருந்து கர்நாடக மாநிலம் பெறும் நிதியை விட, தேசிய வரி வருவாயில் கர்நாடகாவின் பங்களிப்பு அதிகமாக உள்ளதாகத் தெரிவித்தார்.

கர்நாடகாவில் இருந்து 4 லட்சம் கோடி ரூபாய்கு மேல் வரிகளை பெறும் ஒன்றிய அரசிடம் இருந்து 60 ஆயிரம் கோடி ரூபாய் வரை மட்டுமே திரும்பக் கிடைப்பதாகவும் கூறிய அவர், இது 100 ரூபாயை பெற்றுக் கொண்டு வெறும் 15 பைசாவை திரும்ப அளிப்பதாகும் என்றும் தெரிவித்தார்.

கர்நாடகா ஒரு முன்னேறிய மாநிலம் என்பதற்காக கூட்டாட்சி அமைப்பின் கீழ் இழைக்கப்படும் அநீதியை ஏற்க முடியாது என்றும் தெரிவித்த சித்தராமையா, வரி வருவாயை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பதில் ஒன்றிய அரசு நியாயமான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் தொழிற்சாலைகள் பெருகுகிறது!

# ஒரகடத்தில் உலகளாவிய தொழில் மையம்!

## இருங்காட்டுக்கோட்டையில் செயல்பட்டு வரும் 'செயிண்ட் கோபைன்' நிறுவனம் ரூ. 2,858 கோடியில் அமைக்கிறது!

**சென்னை, நவ.4-**

**கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சென்னையை அடுத்துள்ள ஒரகடம் சிப்காட் தொழில் பூங்காவில் 2 ஆயிரத்து 858 கோடி ரூபாய் செலவில் உலகளாவிய மையம் அமைப்பதற்கான சுற்றுச்சூழல் அனுமதிகோரி செயிண்ட் கோபைன் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.**



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த முன்னணி கண்ணாடி தயாரிப்பு நிறுவனமான செயின்ட் கோபைன், சென்னையை அடுத்துள்ள ஒரகடம் சிப்காட் தொழில் பூங்காவில் இயங்கி வருகிறது. ஒரகடம் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள இந்த ஆலைக்கு 127 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த இடத்தில், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வளர்ந்து வரும் தொழில் மற்றும் இந்தியாவில் இந்நிறுவன தயாரிப்புகளுக்கு இருக்கும் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு செயின்ட் கோபைன் உலகளாவிய உற்பத்தி மையத்தை அமைக்க உள்ளது. இதன் மூலம், இந்தியாவின் கண்ணாடித் தொழில் வளர்ச்சிக்கு இந்நிறுவனம் பெரும்பங்காற்ற உள்ளது.

இந்த உற்பத்தி மையத்திற்கு கடந்த ஆகஸ்ட் மாதம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இந்த உலகளாவிய மையத்தில் Glasswool, Gypsum Plasterboards, Plasters, Acoustic Ceilings, Float Glass, Solar Glass, Adhesives, Sealants உள்ளிட்டவை உற்பத்தி செய்யப்பட உள்ளது.

இந்நிலையில், ஒரகடம் சிப்காட் தொழில் பூங்காவில் 2 ஆயிரத்து 858 கோடி ரூபாய் செலவில் உலகளாவிய மையம் அமைப்பதற்கான சுற்றுச்சூழல் அனுமதிகோரி செயிண்ட் கோபைன் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

## 19 இந்திய நிறுவனங்கள் மீது

## அமெரிக்கா பொருளாதாரத் தடை!

வாஷிங்டன், நவ. 4-

ரஷ்யாவுக்கு மின்னணு சாதனங்களை விற்பனை செய்ததாக 19 இந்திய நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரி முதல் ரஷ்யா, உக்ரைன் இடையே போர் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக ரஷ்யா மீது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

ரஷ்யாவுக்குத் தேவையான மின்னணு சாதனங்கள், ஆயுத உதிரிபாகங்கள், ராணுவ தளவாடங்கள் உள்ளிட்டவை வடகொரியா, சீனா, இந்தியா, துருக்கி, மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், கஜகஸ்தான் நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களிடம் இருந்து மறைமுகமாக கொள்முதல் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதை அமெரிக்க அரசு கண்டுபிடித்து சுமார் 400க்கும் மேற்பட்ட நிறுவனங்கள், தனிநபர்கள் மீது பொருளாதார தடைகளை விதித்துள்ளது.

இதில் இந்தியாவைச் சேர்ந்த 19 நிறுவனங்கள், தனிநபர்களும் இடம்பெற்றுள்ளனர். அசென்ட் அவிடேசன் அண்டியா, மஸ்க்ட்ரான்ஸ், டி.எஸ்.எம்.டி. குளோபல், புயூடிரிவோ உள்ளிட்ட நிறுவனங்கள் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைப் பட்டியலில் உள்ளன.

நாளை 5ம் தேதி அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இதை கருத்தில் கொண்டே ஆளும் ஜனநாயக கட்சியின் அரசு 400 நிறுவனங்களுக்கு பொருளாதார தடை விதித்திருப்பதாகவும், இது அரசியல்ரீதியான நடவடிக்கை என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## நாகை - இலங்கை கப்பல் போக்குவரத்து

## வாரத்திற்கு 5 நாட்களாக அதிகரிப்பு!

நாகை, நவ.4-

நாகையில் இருந்து இலங்கை செல்லும் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை வாரத்துக்கு 5 நாள்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.



இதுபற்றி இந்த்ஸ்ரீ கப்பல் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: -

நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகம் இடையே கடந்த ஆகஸ்ட் 16ஆம் தேதி சிவகங்கை பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கியது.

போதிய பயணிகள் முன்பதிவு இல்லாததால், நாள்தோறும் நாகை துறைமுகத்திலிருந்து இயக்கப்படுவதாக இருந்த இந்த கப்பல் வாரத்தில் 3 நாட்கள் மட்டும் இயக்க இயக்க முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில் கப்பல் போக்குவரத்து இருந்து வந்தது.

இந்நிலையில் பயணிகளின் வருகை அதிகரிப்பை தொடர்ந்து கூடுதல் நாட்கள் கப்பலை இயக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். அதனை ஏற்று கடந்த மாதம் 21ந்தேதி முதல் சனிக்கிழமைகளிலும் கப்பல் இயக்கப்பட்டது.

இதற்கிடையே பயணிகள் வருகை அதிகரித்து வருவதால் வரும் 8ம்தேதி முதல் வாரத்தில் செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு உள்ளிட்ட 5 நாட்கள் கப்பல் இயக்கப்படும். பயணிகள் www.sailindsri.com என்ற இணையதள பயணச்சீட்டை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தேர்தல் ஆணையம் மீது சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுப்போம்!

### காங்கிரஸ் கட்சி எச்சரிக்கை!

புதுடெல்லி, நவ. 4-

அரியானா சட்டசபை தேர்தலில் ஓட்டு எண்ணிக்கையில் முறைகேடு நடந்திருப்பதாக தேர்தல் ஆணையத்துக்கு காங்கிரஸ் கட்சி கடிதம் எழுதியது . இதை விசாரித்த தேர்தல் ஆணையம், காங்கிரஸ் அளித்த புகாரை நிராகரித்தது. மேலும், ஆணையம் மீது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறுவதை தவிர்க்க வேண்டும். முக்கியத்துவம் வாய்ந்த ஓட்டு எண்ணிக்கை நடைமுறை மீது பொறுப்பற்ற குற்றச்சாட்டுகளை கூறுவதால், குழப்பமும், பொது அமைதியின்மையும் ஏற்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியிருந்தது.

இந்த நிலையில், தேர்தல் ஆணையத்திற்கு பதில் கடிதம் ஒன்றை காங்கிரஸ் கட்சி அனுப்பியுள்ளது. கட்சியின் மூத்த தலைவர்களான கே.சி.வேணுகோபால், அசோக் கெலாட், அஜய் மக்கான் உள்ளிட்ட 9 தலைவர்கள் கையெழுத்திட்டுள்ள அந்தக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது: குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு மட்டுமே தேர்தல் ஆணையத்திற்கு கடிதம் எழுதினோம். தேர்தல் ஆணையம் மற்றும் ஆணையர்களை மதிக்கிறோம். ஆனால், தேர்தல் ஆணையம் எங்களுக்கு அளிக்கும் பதில்கள் தாழ்ந்த தொனியில் உள்ளது.

தேர்தல் ஆணையம் தனக்கு தானே நற்சான்றிதழ் அளித்தது ஆச்சர்யம் அளிக்கவில்லை. ஆனால் தேர்தல் ஆணையம் அளித்த பதிலில் உள்ள தொனியை எளிதாக எடுத்து கொள்ள மாட்டோம் அது எங்களின் தலைவர்களை விமர்சிப்பது போல் உள்ளது. மோசமான தொனியில் உள்ளது. முடிவு எடுக்க வேண்டிய இடத்தில் உள்ளவர்கள். எந்த விமர்சனத்தையும் செய்யக்கூடாது. கட்சியை தாக்கக்கூடாது. ஆனால், தேர்தல் ஆணையத்தின் இதுபோன்ற கருத்துகளை நீக்குவதற்கு சட்ட ரீதியிலான நடவடிக்கையை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று அவர்கள் கூறியுள்ளனர்.

## ஊட்டச்சத்து குறைபாடுள்ள

# 10 லட்சம் குழந்தைகளை மீட்டெடுத்த திராவிட மாடல் அரசு!

## உயர் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடு!

சென்னை, நவ.4-

ஒரு குழந்தையின் வாழ்க்கையில் முதல் ஆயிரம் நாட்களுக்குள் உண்ணும் மோசமான ஊட்டச்சத்து அவர்களுக்கு பல எதிர்மறை காரணங்களை ஏற்படுத்தும். இது குன்றிய வளர்ச்சி, அறிவாற்றல் திறன் மற்றும் பள்ளி செயல்திறன் குறைதல், வயிற்றுப்போக்கு போன்ற நோய்களுக்கு வழிவகுக்கும். ஒரு அறிக்கையின்படி இந்தியாவில் 68 சதவீதம் குழந்தைகள் 5 வயதிற்கு முன்பே இறக்கின்றனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

தமிழகத்தில் ஆரோக்கியமான குழந்தைகளே, நாட்டின் வளமான எதிர்காலம் என்பதை கருத்தில் கொண்டு, முதல்வர் ஸ்டாலின் கடந்த 2022ம் ஆண்டு மே மாதம் 7ம் தேதி அன்று சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதில் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நலமுடன் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன், மாவட்ட அளவில் குழந்தை களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்கிறோம் என்றும் மருத்துவ உதவிகள் தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் ஒன்றும் ஏற்படுத்த அரசு முடிவெடு த்துள்ளது என்று கூறியிருந்தார்.

அதனை செயல்படுத்தும் விதமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை மற்றும் சுகாதாரத்துறை ஒன்றிணைந்து 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தை மற்றும் ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகள் ஆகியோரைப் பிரித்தறிந்து குழந்தைகளின் ஊட்டச் சத்துக் குறைபாட்டினை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

'ஊட்டச்சத்தை உறுதி செய்' என்ற புதிய திட்டத்தினை 2022ம் ஆண்டு மே மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதற்காக சிறப்பு மருத்துவ பரிசோதனை முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடந்தது. இதில் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் வயதிற்கேற்ற எடையின்மை, உயரமின்மை மற்றும் மெலிவுத்தன்மை ஆகிய குறைபாடுகளை கண்டறிந்து அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சியினை மேம்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழகத்தில் மொத்தம் 99 லட்சத்து 5 ஆயிரத்து 289 குழந்தைகள் உள்ளனர்.

இதில் 10 லட்சம் குழந்தைகளுக்கு பல்வேறு குறைபாடுகள் இருப்பது சோதனையில் கண்டறியப்பட்டது. இதன்மூலம் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய வர்களாக கண்டறியப்பட்டுள்ள குழந்தைகள் கண்காணிக்கப்பட்டு அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சிறப்பு மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படும் குழந்தைகளின் விவரங்கள் அதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள சிறப்பு செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு கண்காணிக்கப்படும்.

மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பிறகு ஊட்டச்சத்து மட்டும் தேவைப்படும் குழந்தைகளுக்கு தனியாக சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குழந்தைகள் பல்வேறு நோய் தாக்குதல்களுக்கு ஆளாகின்றனர். இதை முற்றிலும் தடுக்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் ஊட்டச்சத்தை உறுதி செய் என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி துறை மூலமாக சிறப்பு வளர்ச்சி கண்காணிப்பு இயக்கம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு அங்கன்வாடி, ஆரம்ப பள்ளிகளில் சுகாதாரத்துறை சார்பில் மருத்துவகுழுவினர் நேரடியாக குழந்தைகளுக்கு பரிசோதனை மேற்கொண்டனர். அப்போது குறைபாடு உள்ள குழந்தைகள் குறித்து செயலியில் பதிவேற்றம் செய்து அவர்களுக்கு தேவையான மருத்துவ சேவை வழங்கப்படுகிறது.

குறிப்பாக குழந்தைகள் நல மருத்துவரிடம் அழைத்துச் சென்று அவர்களுக்கு எந்த மாதிரியான உடல் பாதிப்பு உள்ளது? அவர்களுக்கு என்ன சிகிச்சை அளிப்பது? மேலும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு சத்தான உணவுகள் வழங்குவது குறித்தும் ஆலோசனை வழங்கப்படுகிறது. குறிப்பாக குழந்தைகளுக்கு பிறவி கோளாறு, ஊட்டச்சத்து குறைபாடு எடையின்மை, உயரமின்மை மற்றும் மெலிவுத்தன்மை, இருதய பாதிப்பு, மூளை வளர்ச்சி பாதிப்பு, மன பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தேவைப்படும் குழந்தைகளுக்கு அரசு மருத்துவக்கல்லூரிகள் மற்றும் சென்னையில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனைகள் மூலம் உயர் மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படும். அதிகளவில் பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கு முதல்வரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் இலவசமாக மருத்துவ சிகிச்சை முழுமையாக மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்